**கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 859,741 தொகை கணக்கீடு செய்யாத காரணத்தினால் ஆண்டின் வருமானம் மற்றும் நிலுவை நீதிமன்ற தண்டப்பண வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 2014 நவம்பர் மாதத்தின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 770,572 பெறுமதியான 696 கல்வனைஸ் குழாய்கள் கணக்கீடு செய்யப்பட்டமை காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வடக்கு கிழக்கு உள்ளுராட்சி சேவை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 43,690,895 ஆன கட்டிடங்கள், உபகரணங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களினால் ரூபா 24,228,669 பெறுமதியான மீதியொன்று கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் பராமரிக்கப்படுகின்ற பி.ச அறிக்கை மற்றும் பேரேட்டுக் கணக்குகளுக்கு இடையே ரூபா 1,472,413 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 180,437,370 ஆக இருந்த போதிலும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கின் மீதி ரூபா 181,951,330 ஆக இருந்தமையால் இக்கணக்குகளுக்கிடையே ரூபா 1,519,960 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) பொது காசேட்டில் கொடுப்பனவு ரூபா 47,372,105 ஆக இருந்த போதிலும் ஆண்டின் கொடுப்பனவு செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 47,615,190 ஆக இருந்தமையால் ரூபா 243,085 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

வருடக் கணக்காக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 26,794 கூட்டுத்தொகையான 05 பெறவேண்டிய கணக்கு மீதிகளையும் ரூபா 811,017 கூட்டுத்தொகையான 02 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளையும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அம்மீதிளின் காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

கட்டிடங்கள் பதிவேடு, உரித்தினை உறுதிப்படுத்வதற்குரிய உரித்து உறுதிகள்/ கையளிப்பு பதிவேடு பௌதீக சொத்துக்கள் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 132,449,658 ஆன நீண்டகாலமாக இருந்து வரும் காணி மற்றும் கட்டிடங்கள் மீதிகள் என்பவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாமல் இருந்தன.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்ளுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| (i) விதி 5.11 | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக முறையான காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீஎஸ் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபை பயன்படுத்தும் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,799,265 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,019,698 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கடை வாடகை | 79,085 | 387,000 | 67,300 | 317,100 | 81,685 |
| கேள்வி | - | 702,075 | - | 657,443 | 44,632 |
| வியாபார மற்றும் கைத்தொழில் வரி | - | 1,500,000 | - | 2,254,540 | - |
| அனுமதிப் பத்திரங்கள் | - | 175,000 | - | 254,937 | - |
| மொத்தம் | 79,085 | 2,764,075 | 67,300 | 3,484,020 | 126,317 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள அசையும் ஆதனங்கள் மற்றும் அசையாத ஆதனங்களின் வருடாந்த பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட வீதவரி விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 குத்தகை வாடகை

மீளாய்வாண்டில் இறுதிவரை இரண்டு குத்தகையார்களிடமிருந்து ரூபா 44,632 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 129(2)(அ) பிரிவின் பிரகாரம் முதலாவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை தண்டப்பணம் ரூபா 1,741,619 மற்றும் 129(2)(ஆ) பிரிவின் பிரகாரம் நிலுவை முத்திரை கட்டணங்கள் ரூபா 27,705,950 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக பிரதேச சபை சட்டத்தின் 122 ஆவது பிரிவின் உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வட மத்திய மாகாண பிரதான அமைச்சரால் 2016 மார்ச் 30 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட 1960/35 ஆம் இலக்க உப உறுப்புரையை சபையினால் பின்பற்றியுள்ளதாக2017 யூலை 28 ஆந் திகதிய 2030 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடு வர்த்தமானி அறிவித்தல் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

சபையினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளுக்காக 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக சபையால் எடுக்கப்பட்ட நடைமுறைகள் கணக்காய்விற்காக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

உள்ளூராட்சி மன்ற மறுசீரமைப்பு சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் செயற்படுத்துவது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | சுற்றறிக்கை இலக்கம் | பரிந்துரை இலக்கம் | விடயம் | குறைபாடுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 09 | 07 | மயான பூமி | i. மயானங்கள், மற்றும் புதைகுழி இடங்கள், மயான மற்றும் புதை குழி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்படாமை<br>ii. மயானங்களின் உரித்து தொடர்பான ஆவணங்களை பாதுகாப்பாக வைப்பது உட்பட 07 விடயங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஆ) | 06 | 2.2(iii) | வீதி பராமரிப்பு | தொடர்ச்சியான செயற்படுத்தும் வீதி பராமரிப்பு முறையொன்று ஸ்தாபிக்கப்படாமை |
| | | 03 | | சபைக்குரிய வீதிகளின் எல்லைகள் வர்த்தமானியில் வெளியிடப்படாமை. |

**(இ)** திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 2014 நவம்பர் 17 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 770,572 பெறுமதியான 696 கல்வனைஸ் கம்பங்களில் ரூபா 582,358 பெறமதியான 526 கொடிக் கம்பங்கள் காணாமல் போனமை தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை பொறுப்பு வாய்ந்தவர்கள் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிதி ஏற்பாடு கிடைக்காமை**

தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய 04 செயற்பாடுகளுக்காக ரூபா 716,920 நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பிடப்பட்ட வருமானம் கிடைக்காமையால் அச் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**04. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் 04 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும்

உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 37 சதவீதத்திலிருந்து 112 சதவீதம் வரையான விலகலொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 06 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 24 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான சேகரிப்பு | i ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமை<br>ii சரியான வருமான மதிப்பீடு தயாரிக்கப்படாமை<br>iii. வருமான சேகரிப்பு செயற்திறனாக இல்லாமை |
| (ஆ) திட்டமிடல் | கூட்டிணைந்த திட்டமொன்று, செயல் நடவடிக்கைத் திட்டமொன்று, பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமை. |
| (இ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | i காலப்பகுப்பாய்வு தயாரிக்காமை<br>ii அட்டவணைகள் தயாரிக்கப்படாமை<br>iii நீண்டகாலமாக இருந்து மீதிகள் இனங்காணப்பட்டு தீர்வுசெய்யப்படாமை |
| (ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | உக்காத கழிவுப் பொருள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பாடமை |